★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 53630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: தை 19உ புதன் (1—2—56) ★ ★ வெளியூர் : தை 20உ வியாழன் (2—2—56) [இதழ் 197

ஆட்சி மொழித் தகராறு எதிரொலி

12 மக்கள் சபை உறுப்பினர்கள் விலகினர்

கொழும்பு, ஜன. 31—

நாட்டின் ஆட்சி மொழியாக சிங்களம் மட்டுமே இருக்க வேண்டுமென்ற ஆளும் கட்சி (ஐக்கிய தேசியக் கட்சி)யின் கொள்கையை எதிர்த்து, இன்று மேலும், மக்கள் சபையின் இரு தமிழ் உறுப்பினர்கள் அக்கட்சியிலிருந்து விலகினர்.

இத்துடன் மொழிப் பிரச்சினையின் தகராறு காரணமாக சர்க்கார் கட்சியிலிருந்து மக்கள் சபையைச் சேர்ந்த 12 தமிழ் உறுப்பினர்கள் விலகிக் கொண்டுள்ளனர்.

சென்னை அமைச்சர்களுக்கு அறைகூவல்!

'பதவியைத் துறப்பது தன்மானம் காப்பதற்கே'

'எல்லாக் காரணங்களாலும் தேவிகுளம்-பீர்மேடு தமிழருக்கே'

சிதம்பரம் பொதுக் கூட்டத்தில் ஈ. வெ. கி. சம்பத் முழக்கம்

"தேவிகுளம் - பீர்மேடு வட்டங்கள் தமிழர்களுக்குத்தான் சொந்தம்; அவை தமிழகத்துடன்தான் இணையவேண்டுமென்பதற்கு, மாநிலப் புனரமைப்புக் குழுவினர் வேறு பல மாநில அமைப்புகளுக்காகக் காட்டியுள்ள எந்தக் காரணத்தைக் கொண்டு நோக்கினாலும், அல்லது எல்லாக் காரணங்களால் ஆராய்ந்தாலும் முழு நியாயமானது என்பதை நாம் தெளிவாக விளக்கியிருக்கிறோம்.

"மொழிவாரியாக நோக்கும்போது, பெல்லாரியில் பெரும்பாலானோர் கன்னடியர்களாயிருந்தாலும், ஆந்திராவில் எதிர்காலத்தில் இடம் பெறப் போகும் சில அபிவிருத்தித் திட்டங்களுக்காக, ஆந்திரருக்குப் பெல்லாரியின் சில பகுதிகள் தரப்பட வேண்டுமென வாதிட்டிருக்கிறார் திறம்பட—குழுவில் இருந்த பணிக்கர்! நிர்வாக வசதி கருதி இதைச் செய்யவேண்டும் என்று கூறும் இந்த மதியூகிக்கு, 'சென்னையின் திட்டங்கள் கருதி தேவிகுளம் - பீர்மேடு சென்னைக்குத் தரப்பட வேண்டும்' என்று ஏன் கூறத் தோன்றவில்லை?

"பெரியாறு நீர்ப்பாசனத் திட்டம் என்பது, சென்னை சர்க்கார் தேவிகுளம்—பீர்மேடு பகுதியில் மேற்கொண்டிருக்கும் நீர்ப்பாசனத் திட்டமாகும். பெரியாறு நீரை ஒரு சொட்டுக் கூட திரு-கொச்சி மாநிலம் பயன்படுத்திக்கொள்ள முடியாது என்பதை பனம்பள்ளி மறுக்கவில்லை; பட்டம் தாணுப்பிள்ளையின் மமதை கூட மறுக்கவில்லை. அந்த ஆற்று நீரை நீர்ப்பாசன காரியங்களுக்குப் பயன் படுத்திக்கொள்வதற்காக ஆண்டுதோறும் 50 ஆயிரம் ரூபாய் வரை சென்னை சர்க்கார் கப்பம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்—அப்பிரதேசம் திரு-கொச்சியில் இணைக்கப்பட்டிருக்கிறது என்பதால்! பெல்லாரிக்குக் கூறப்பட்ட நியாயத்தை, தேவிகுளம்—பீர்மேட்டிற்குக் காட்டுவதற்கு பணிக்கர் ஏன் முன்வரவில்லை? அவரது மூளை ஏன் இங்கு வேலை செய்யவில்லை? எந்த மாநிலத்தின் நிர்வாகத்திற்குத் துணைபுரியக் கூடியதாக தேவிகுளம்—பீர்மேடு வட்டங்கள் உள்ளன? தமிழகத்திற்கா—கேரளத்திற்கா?

"பூகோளரீதியாகச் சிக்கல்களை ஆய்கிறோம்—என்று கூறுகிறார்கள்; பூகோளரீதியாக தேவிகுளம்—பீர்மேடு, எந்த மாநிலத்துடன் தொடர்புடையதாக இருக்கிறது?

"திருவாங்கூர் மகாராஜா, தேவிகுளம்—பீர்மேடு பகுதிகளைப் பார்க்க விரும்பினால், மேற்குத் தொடர்ச்சி மலையின் மேற்குப் பகுதி வழியாக வரமுடியாது; வருவதற்குப் பாதை கிடையாது—சமீப காலம்வரை; திருவாங்கூரிலிருந்து மதுரை வந்து போடிநாய்க்கனூர் சென்று, மதுரை மாவட்ட வழியாகத்தான் தேவிகுளத்தை அடைய முடியும்.

"இப்போதுதான், 'பள்ளிவாசல் திட்டம்' என்ற திரு-கொச்சி சர்க்காரின் அபிவிருத்தி முயற்சியின்போது அமைக்கப்பட்ட பாலம் ஒன்றினால் வழி ஏற்பட்டிருக்கிறது; பாதை இன்னும் பூர்த்தியாகவில்லை. இந்தப் பூகோளரீதியான காரணப்படி நோக்கினாலும் நியாயம் யார் பக்கம் நிற்கிறது?

"வரலாற்றுப் பின்னணியில் பின்னுகிறோம் என்கிறார்களே—வரலாறு, தேவிகுளம் - பீர்மேடு யாருக்குச் சொந்தம் என்று கூறுகிறது?

"தேவிகுளம் - பீர்மேடு வட்டத்தில் கண்ணன் தேவன் உற்பத்தி நிறுவனம் ஒன்று இருக்கிறது. கண்ணன் தேவன் யார்? மதுரை—நெல்லை மாவட்ட ஓரங்களில், 'மன்றுடியார்'கள் என்ற வகுப்பைச் சேர்ந்த மறக்குல குறுநில மன்னர்களில் ஒருவன்தான் கண்ணன் தேவன் என்பான்; இந்த மன்றுடியார் வகுப்பு குறுநில மன்னர்களிடமிருந்துதான் வெள்ளைக்காரர்கள், தேவிகுளம்—பீர்மேடு காடுகளை குத்தகைக்கு வாங்கிக்கொண்டார்கள்—தேயிலையும் ரப்பரும் விளைவிப்பதற்காக! அதனால்தான் வெள்ளையர்கள், தாங்கள் அந்தப் பகுதிகளை யாரிடமிருந்து வாடகைக்குப் பெற்றார்களோ அந்த கண்ணன் தேவன் என்பவரின் பெயரிலேயே தோட்டங்களுக்குப் பெயர் வைத்தார்கள். இன்னும் கண்ணன் தேவன் தேயிலைத் தோட்டங்கள் இருக்கத்தான் செய்கின்றன. இந்த வரலாறு யாருக்குத் துணை புரிகிறது—தமிழருக்கா? கேரளருக்கா?

"மொழிவழி அடிப்படையில் சீர்தூக்கிப் பார்க்கிறோம் என்றார்களே—மொழிவழிப்படி, அங்கு, எவர் அதிகமாக வாழ்கிறார்கள்? மிகப் பெரும்பான்மையினர் தமிழர்கள் தானே!

"அங்குள்ள தமிழர்களை, 'கூலிக்கு உழைத்து வாழக் குடியேறியவர்கள்' என்று கூறுகிறார்கள்; இருக்கலாம்; ஆனால் மலையாளிகள் மட்டும் என்ன, அங்கு பெய்த மழையிலே முளைத்தவர்களா—என்றால் இல்லை; அவர்களும் குடியேறியவர்கள்தான். தமிழர்கள் அங்கு குடியேறுவதற்கு முன்னால்—1,800-ம் ஆண்டில் எல்லாம், அங்கு மனித சஞ்சாரமே இருந்ததில்லை. விலங்கினங்கள் வாழும் வனாந்திரமாகத்தான் அவை இருந்தன; அப்படி இருக்க, பெரும்பாலும் தமிழர்கள் வாழும் அந்தப் பகுதி என்ன காரணத்திற்காகக் கேரளத்தில் இருக்க வேண்டும்?

"பட்டம் தாணுபிள்ளை ஆட்சிபீடத்திலிருந்த காலத்தில், இந்த வட்டங்களில் ஏராளமான மலையாளக் குடும்பங்களைக் குடியேற்றி, அவர்களுக்கு இலவசமாக நிலம் தந்து, குடியிருக்க—வீடு கட்டிக்கொள்ள பணமும் தந்து, அந்தப் பகுதிகளை மலையாளிகள்மயமாக்கிவிட பல இலட்சம் ரூபாய் செலவிட்டார்; ஆனால், குடியேறிய சில நாட்களில் எல்லாம் அந்த மலையாளிகள், தங்களுக்குத் தரப்பட்ட நிலங்களை ஏகர் 20, 25 ரூபாய்க்கு அங்குள்ள தமிழர்களுக்கு விற்றுவிட்டு, மீண்டும் கேரளம் திரும்பிவிட்டார்கள். என்றாலும், இந்தப் பகுதி கேரளத்துடன் இருக்கவேண்டும் என்பது என்ன நியாயம்?

"நிர்வாக வசதி, பொருளாதார உறுதிப்பாடு, பூகோளரீதியான காரணங்கள், வரலாற்றுப் பின்னணி, மொழி அடிப்படை என்று எந்தக் காரணங்கொண்டு பார்த்தாலும் தேவிகுளம்—பீர்மேடு எந்த மாநிலத்துடன் சேர வேண்டும்? எந்த மாநிலத்துடன் சேருவது நியாயம்?"

என்று தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் கடந்த 29—1—56 அன்று பொதுக் குழு முடிவுகளை விளக்கி சிதம்பரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் சொன்னார் :—

"கடந்த ஒரு மாத காலமாகப் பத்திரிகைகளின் எந்தப் பக்கத்தைப் புரட்டினாலும், 'பம்பாயில் போலீசார் மக்களைச் சுட்டுத் தள்ளுகின்றனர்; 60 பேர் செத்துப் போனார்கள்; 500-பேருக்கு மேல் காயம்பட்டார்கள்; 1 கோடி ரூபாய்க்குமேல் சேதம்; ஆயிரமாயிரமான மக்கள் கப்பலேறி கட்சுக்குச் செல்கின்றனர்; விமானம் ஏறி வெளியிடங்களுக்குச் செல்கின்றனர்' என்றுதான் படித்தோம். மற்றொரு பக்கத்தைப் புரட்டினால், 'கல்கத்தாவில் பொதுமக்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள்; டிராம்கள் நகர முடியவில்லை; பஸ்கள் ஓடவில்லை. இரயில்களும் ஓடவில்லை. ஆலைகளிலுள்ள சங்குகள் ஊதவில்லை; அப்படியே அவை ஊதினாலும் வேலைக்குச் செல்வார் யாருமில்லை; பள்ளிகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன; மாணவர்கள் எவரும் பள்ளி செல்லவில்லை' என்றுதான் படித்தோம்.

"பீகார் மாநிலத்தின் தலைநகரான பாட்னாவில், மாநில முதலமைச்சர் தமது சகமந்திரிகளுடன் தமது இராஜினாமாவைச் சமர்ப்பித்திருக்கின்றனர். அதற்கும் கீழே வந்தால், 'ஒரிசா மாநிலத்தின் தலைநகரான கட்டாக்கில் அகில இந்திய ரேடியோ நிலையத்தை மாணவர்கள் கைப்பற்றி, அதனை இயங்கவிடவில்லை', என்று படித்தோம். இப்படி, இந்தியாவின் வட பகுதிகளில் கொந்தளிப்பும், அதன் நிரைமறைவில் கொலையும், கொள்ளையும் நடைபெற்றிருக்கின்றன.

"வடநாட்டில் இப்படி நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருக்கும்போது தமிழர்களிடையே பெரியதோர் வினாக்குறி எழும்பி, நாளுக்கு நாள் மிரட்டிக் கொண்டிருக்கிறது. தமிழர்கள் அமைதியாக இருந்ததைக் கண்டதும், வடவர் ஆதிக்கம், 'தமிழர்கள் அமைதியாக இருக்கிறார்களே — அது அவர்களது சுபாவமா? மாநிலப் புனரமைப்புக் குழுவினர் தமிழர்களுக்கு நீதி வழங்கிவிட்டனரா—அதனால்தான் அவர்கள் சும்மா இருக்கிறார்களா?'— என்ற கேள்விகள் நம்மைத் திகைக்க வைக்கின்றன.

"ஆனால், ஊன்றிக் கவனித்த போது, இந்தியாவின் இதர பாகங்களில் உள்ளவர்களுக்கு எந்த அளவிற்கு அநீதி வழங்கப்பட்டிருக்கிறதோ அதை விட அதிகமாகத்தான் தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது.

"ஆந்திரத்தில் இணைக்கப்பட்டிருக்கிற சித்தூர், திருத்தணி பகுதிகள், திரு-கொச்சியில் சேர்க்கப்பட்டுள்ள தேவிகுளம்—பீர்மேடு தாலுகாக்கள், நெய்யாற்றங்கரை, கொச்சின்—சித்தூர், பாலக்காடு முதலியவை, கொடுத்துப் பறிக்கப்பட்ட செங்கோட்டை தாலுகாவின் ஒரு பகுதி ஆகியவை எல்லாம், தமிழ் நாட்டுடன் சேர்க்கப்பட வேண்டிய பாக்கிப் பட்டியல்களை அடைத்துக்

(4-ம் பக்கம் பார்க்க)

***

பொதுக் குழு முடிவுப்படி

தி. மு. கழக உறுப்பினர் சேர்க்கும் காலம்

29—2—56

வரை நீடிக்கப்படுகிறது

★

கழகம் வலிவும் பொலிவும் பெறக் கழகச் செயலாளர்கள் உறுப்பினர் பதியும் பணியைத் தீவிரமாக்குவார்களாக!

★

தலைமை நிலையத்தில்

பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் உரிமைச் சீட்டுகள் பிப்ரவரி 15-ஆம் நாளுக்குமேல் கிளைக் கழகங்களுக்கு அனுப்பிவைக்கப்பெறும்

—தி. மு. கழகத் தலைமை நிலையம்

***

நாளை!

சென்னை - வண்ணையம்பதியில் அண்ணா அவர்கள் ஆற்றிய கருத்துரை நாளை வெளிவரும்.

நம் நாடு

தி.மு.கழகத்தின் இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 1—2—'56 புதன்

துன்பம் துடைக்கப்பட!

தேவிகுளம்-பீர்மேடு ஆகிய இரு பகுதிகளில் தமிழர்களே பெரும்பான்மையினராக உள்ளனர். அங்குள்ள பெரியாறு நீர்ப்பாசனத்தை நம்பித்தான் மதுரை வாழ வேண்டி இருக்கிறது. அங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கு, சென்னை ஒவ்வொரு ஆண்டும் பெருந் தொகையைக் கப்பமாகக் கொடுத்துக்கொண்டு வருகிறது.

வடக்கே உள்ளதுபோன்று, தமிழ்நாட்டில் பெரும் பெரும் உயிர் நதிகள் கிடையாது. இவ்வுண்மையை அடிக்கடி அரசாங்கமே வற்புறுத்தியும் வருகிறது.

அதிகமாக உயிர் நதிகள் இல்லாத காரணத்தால், இங்கு மின்சார உற்பத்தியும் குறைவாக இருந்துவருகிறது; மின்சாரக் குறைவின் காரணமாகப் பற்பலவிதமான தொழில் வளர்ச்சியும் தடைபட்டுக் கிடக்கிறது. இதையும் அரசாங்கம் எப்பொழுதும் கூறி வந்திருக்கிறது.

மின்சாரக் குறைவைப் போக்கப் பெரியாற்றிலிருந்து நாம் பெற்றுவரும் நீரின் கனபரிமாணத்தை அதிகமாக்கி, இப்பொழுதிலும் அதிகமான மின்சாரத்தை உற்பத்தி செய்ய சென்னை அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

பெரியாறு தண்ணீரைக் கொண்டு மின்சாரக் குறைவைப் போக்கிக்கொள்ளும் முயற்சிக்கு தி. கொ. அரசாங்கம் முட்டுக்கட்டை போட்டுக்கொண்டே வந்திருக்கிறது. பெரும் முயற்சிக்குப் பிறகு பெரியாறு மின்சாரப் பெருக்கத் திட்டத்திற்கு விமோசனம் ஏற்பட்டு இருக்கிறது.

தேவிகுளம்—பீர்மேடு சென்னைத் தமிழகத்துடன் இணைக்கப்பட்டிருக்கும்பட்சத்தில், பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே மின்சாரத் துறையில் சென்னை முன்னேறி இருக்க முடியும். மின்சாரப் பெருக்கத்தின் காரணமாகச் சிறந்ததோர் தொழிற்கோட்டமாகச் சென்னை திகழ்ந்திருக்கக்கூடும். அதன் விளைவாக இங்குள்ளோர் வேலை பெற்று, வறுமை நீங்கப் பெற்று, நல்வாழ்வு பெற்றும் வாழ்ந்திருக்க முடியும்.

ஆனால் சென்னை தமிழகத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டிய தேவிகுளம், பீர்மேட்டை, முறையற்ற முறையில், பொருந்தா நிலையில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், திருவாங்கூர் சமஸ்தானத்துடன் முடிச்சுப் போட்டுவிட்டது. அதனால் திருவாங்கூருக்கும் இலாபமில்லை. ஆனால் பொருளாதாரத் துறையில் சென்னை அதிகமாகப் பாதகமடைந்தது.

காட்டுவளமும் சென்னைக்கு அதிகமாகக் கிடையாது. 'அதிகமாக இல்லை' என்பதைக் காட்டிலும், 'அறவே கிடையாது' என்று சொல்வதே பொருத்தமுடையதாகும். இந்த உண்மையையும் சென்னை அரசாங்கமே உறுதிசெய்து உரக்கக் கூவியிருக்கிறது. தேவிகுளம்—பீர்மேடு இக்குறைபாட்டைக் களைந்துவிடும்.

தேவிகுளம்—பீர்மேடு பகுதிகளில் குடி இருப்பவர்களில் பெரும்பான்மையினர் தமிழர்களேயாவர். இவ்வுண்மையைத் தக்க ஆதாரங்களுடன் சென்னை அரசாங்கம் எடுத்துக் காட்டி இருக்கிறது.

அவர்கள், சென்னை தமிழகத்துடன் இணைந்துகொள்ளத் துடியாய்த் துடிக்கின்றனர். தங்களுடைய எதிர்காலத்தை நிர்ணயித்துக்கொள்ளும் உரிமையும் கடமையும் அவர்களுக்கு இயல்பாகவே இருக்கிறது. அவர்களுடைய விருப்பறிந்துதான், அவர்கள் வாழும் தேவிகுளம்—பீர்மேடு பகுதிகளின் எதிர்காலத்தை நிச்சயிக்க வேண்டும். அதுவே ஆட்சியாளர்களின் கடமை. அதற்குக் கட்டுப்பட்டு நடக்க இந்தியப் பிரதமர் நேரு—அவர் எவ்வளவு இமயம் போன்ற பெரியவராக இருந்தாலும்—கடமைப்பட்டிருக்கிறார். அந்தக் கடமையை அலட்சியப்படுத்திவிட்டு, தீர்ப்பளிக்க நேரு முந்துவாரானால், அது வெறும் எதேச்சாதிகாரமேயாகும். அதைத்தான் நேரு இப்பொழுது செய்திருக்கிறார்.

எனவே, நேருவின் தீர்ப்பு நீதியானது அல்ல; நேர்மையானது அல்ல; நாணயமானது அல்ல; ஒருதலைப்பட்சமானது —ஓரவஞ்சனையானது — ஒழிக்கப்பட வேண்டியது.

இந்தியப் பிரதமரின் தீர்ப்பு, பொதுவாகத் தமிழர்களுக்கு, குறிப்பாகத் தேவிகுளம் - பீர்மேடு வாழ் தமிழர்களுக்குப் பெருங்கேடு சூழ்வதாக இருக்கிறது. அக்கேடு மாற்றப்பட்டாக வேண்டும்; அக்குறை களையப்பட்டாக வேண்டும்.

தேவிகுளம், பீர்மேடு ஆகிய இரு பகுதிகளும், எதிர்காலத்தில் திரு-கொச்சியுடன் இணைக்கப்பட வேண்டுமா, அல்லது சென்னைத் தமிழகத்துடன் இணைக்கப்பட வேண்டுமா என்பதைக் கண்டறிவதில் அதிக சிக்கல் எதுவுமில்லை. அங்குள்ளாரிடை வாக்கெடுப்பு நடத்துவதே அதற்குரிய அறவழியாகும். அதைத் தவிர்த்த வேறு வழி எதுவும் சர்வாதிகார வழியேயாகும். ஆசிய ஜோதி மேற்கொள்ளுவதானாலும் அது வடிகட்டின சர்வாதிகாரமேயாகும்.

சிக்கலைத் தீர்க்க தெளிவான மார்க்கம் மக்களாட்சி முறையில் இருக்க, அதை, எடுத்துப் பார்க்கவும், ஏற்றுக்கொள்ளவும், கட்டுப்பட்டு நடக்கவும், இந்தியப் பிரதமர் தயங்குவது ஏன்? பின்னடைவது ஏன்?

தாம் எண்ணுவதுபோல், தாம் காணவிரும்புவதுபோல், தேவிகுளம், பீர்மேட்டின் முடிவு இருக்காதே என்று நேரு அஞ்சுவதே, அதற்குக் காரணம் என்பது சொல்லாமலே அமையும். எனவே, இந்தியப் பிரதமர் நேரு தந்தத் தீர்ப்பின் அவலட்சணத்தை—அநீதியை உலகம் அறிந்து கொள்ளவும், தமிழர்களுக்கு அவர் இழைத்தத் துன்பம் துடைக்கப்படவும், பொது வேலை நிறுத்தம் ஒரு துவக்க முயற்சியாகும். அம்முதல் முயற்சி வெற்றி பெற, தம்மால் ஆன உதவி அனைத்தையும் கரவாது செய்து தரும்படி, தமிழராய்ப் பிறந்த அனைவரையும் நாம் பணிவன்புடன் வேண்டிக் கொள்ளுகிறோம்.

இந்தியாதான் முக்கிய இடம் வகிக்கிறதாம்!

இந்தியாவில் ஆண்டிற்குச் சுமார் 60,000 டன் முந்திரிக் கொட்டை உற்பத்தியாகிறது; முந்திரிக்கொட்டை வியாபாரத்தில், உலக மார்க்கெட்டில் இந்தியாதான் முக்கிய இடம் வகிக்கிறது. இவ்வர்த்தகத்தில் 90 சதவிகிதம் இந்தியர்களின் கையில்தான் உள்ளது. இந்தியாவிலிருந்து முந்திரிக் கொட்டை இறக்குமதி செய்யும் நாடுகளில் அமெரிக்காவும், பிரிட்டனும் முதன்மையானவையாகும். அவை இரண்டும் இந்திய உற்பத்தியில் 75 சதவிகிதத்தை இறக்குமதி செய்கின்றன.

இயந்திர மூளை!

பாரிஸ், ஜன. 29—

குண்டு வீசும் விமானங்களை நோக்கி தாமாக இயங்கும் ராக்கெட் குண்டுகளைச் செலுத்தக் கூடிய 'ராடார்' மூளை ஒன்றைப் பிரெஞ்சு விஞ்ஞானிகள் கண்டிருக்கின்றனராம். 50 மைல் வரை உள்ள விமானங்களை தாக்கும் சக்தி இதற்கு உண்டாம் இரண்டு லாரிகளுக்குள் அடங்கிவிடக்கூடிய இதைக் கொண்டு சோதனைகள் நடத்தப்படும் என்றும் கூறப்படுகிறது.

விலகமாட்டார்!

மராட்டியப் பிரதேச காங்கிரஸ் பொதுச் சபைக் கூட்டம் நிறைவேற்றிய தீர்மானத்திற்கு ஒப்ப இந்திய நிதி மந்திரி சிந்தாமண் தேஷ்முக் தமது பதவியிலிருந்து விலகமாட்டார் என்று தெரியவருகிறது.

தெரிந்துகொள்ளுங்கள்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 40 இலட்சம் ஏக்கர் நிலத்தில் மண்வளப் பாதுகாப்பு வேலை மேற்கொள்ளப்படும்; இது சம்பந்தமாக சுமார் 70 இலட்சம் ஏக்கர் நிலம் 'சர்வே' செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வேலைக்குத் தேர்ச்சி பெறாத தொழிலாளர்கள் ஆகியோரில் 24 இலட்சம் பேரும், நிர்வாக சிப்பந்திகள், குமாஸ்தாக்கள், தொழில் நுட்ப சிப்பந்திகள் ஆகியோர் 5,000 பேரும் தேவைப்படுவார்கள்.

அறிக்கை வருமாம்!

திருச்சி, ஜன. 28—

நெல் அரைக்கும் ஆலைகளுக்கு அனுமதி வழங்குவது பற்றி சர்க்கார் விரைவில் ஒரு அறிக்கை வெளியிடுவார்கள் என்று திருச்சி மாவட்ட அதிகாரி மலையப்பன் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறாராம்.

உத்தேசமில்லையாம்!

சென்னை, ஜன. 30—

திருமணத்தின்போது 'வரதட்சிணை' கொடுக்கும் முறைக்குத் தடை விதிக்கும் சட்டம் கொண்டு வரும் உத்தேசம் சர்க்காருக்கு இல்லை என்று மேல் சபையில விவசாய மந்திரி பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

பீகாரில் கங்கை நதிக்குக் குறுக்கே அமைக்கப்படவிருக்கும் இரயில்—சாலை பாலத் திட்டத்துக்கு மொத்தம் ரூ 16 கோடி செலவாகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது; அப்பாலம், அது போன்றவற்றில் உலகத்திலேயே மிகப் பெரியதாகும்.

பொதுச்செயலாளர் விளக்க உரை

[3-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

"அந்த அடி தரும் நாள்தான் பிப். 20-ந் தேதி; அன்று, இந்த நாட்டுமக்கள் பெரியதொரு பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டுமென சர்வ கட்சியினரும் கொண்ட குழுவினர் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். டெல்லி சர்க்கார் அநீதி இழைத்திருக்கிறது, தமிழர்களுக்கு—என்பதை எடுத்துரைப்பதற்காக நம் கண்டனத்தை—எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்காக, அந்த அநீதிக்கு உடந்தையாக இருந்த சென்னை மாநில சர்க்காரை நாம் கண்டிக்கிறோம் என்பதை எடுத்துரைப்பதற்காக—இடித்துக் காட்டுவதற்காகத்தான் பொது வேலை நிறுத்தம். இது, முதல் நடவடிக்கையாகும்.

"இந்த சகல கட்சி முடிவை தி. மு. கழகப் பொதுக் குழு சிதம்பரத்தில் கூடி ஏற்றுக்கொண்டிருக்கிறது; ஆதரவு தந்திருக்கிறது.

"பிப். 20-ந் தேதி பொதுவேலை நிறுத்தம் அமைதியாக நடைபெற வேண்டும்; சிறிதும் பலாத்காரம் தலைதூக்கக்கூடாது. அழிவு ஏதேனும் ஏற்பட்டால் அந்த அழிவு நமக்குத்தான் நஷ்டமாகும் என்பதை மக்கள் மறந்துவிடக்கூடாது.

"பள்ளிகளுக்கு மாணவர்களும், ஆசிரியர்களும் செல்லாவிட்டால், பள்ளி நடைபெறாது; ஆலைகளுக்குத் தொழிலாளர்கள் செல்லாவிட்டால் ஆலைகள் இயங்க முடியாது. இப்படி, பிச்சைக்காரர்கள் உட்பட எவரும் அன்று வேலை செய்யக் கூடாது; இரயில்வே தொழிலாளர்கள், பஸ் போக்குவரத்துத் தொழிலாளர்கள், ஆலைத் தொழிலாளர்கள், சர்க்கார் அலுவலகங்களில் பணி புரிவோர்—இப்படி எல்லாத் துறைப் பணியாளர்களும் தமிழ் மக்களின் நலன் கருதி பிப்ரவரி 20-ந் தேதியன்று பொதுவேலை நிறுத்தத்திற்கு வெற்றி தேடித் தரும் வகையில் பணிபுரிய வேண்டும்.

"சிறு சிறு கடைகள் கூடத் திறந்திருக்கக் கூடாது. கடைக்காரர்கள் எல்லாம் தாங்களாகவே கடைகளை அடைத்துவிடுவது நல்லது; பிறர் வந்து வேண்டுகோள் விடும்வரை காத்திருக்காமல் தாங்களாகவே கடைகளை அடைத்துவிட வேண்டும்; பிறர் வேண்டுகோள் விடுத்தும் கேட்காமலிருந்து, பின் வேண்டுகோள் வற்புறுத்தலாகி, வற்புறுத்தல் ஆத்திரமாகி, ஆத்திரம் ஆவேசமாகி விட்டால், பின்னர் ஏதேதோ நடைபெறத் தொடங்கினாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை; அந்த நிலைக்குச் செல்லாமல், இப்போதிருந்தே பிப்ரவரி 20-ந் தேதியை நினைவில்கொண்டு, தாங்களாகவே மக்கள் முன்வந்து பொதுவேலை நிறுத்தத்திற்கு வெற்றிதர வேண்டும். அப்போதுதான், 'எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாரும் தங்களுக்குள்ளாகவே அடித்துக் கொள்வார்கள். நாம ஒன்றும் தலையிடவேண்டாம். நம்மை எவரும் அசைக்க முடியாது' என்று மமதை கொண்டிருக்கும் அரசாங்கத்திற்குப் புத்தி கற்பிக்க முடியும்.

"மேலும், எல்லாக் கட்சியினரும் கலந்துகொள்ளும் இந்த ஆர்ப்பாட்டங்களின்போது — 'தேவிகுளம், பீர்மேடு தமிழர்களுக்கே,' 'டெல்லி சர்க்கார் அநீதி ஒழிக' என்று நமது குரல்களை ஒலிப்பதும், அட்டைகளைத் தாங்கிச் செல்வதையும் தவிர, கொடிஏதும் பிடித்துக்கொண்டு செல்லக்கூடாது—என்றும் முடிவாகியிருக்கிறது. எந்தக் கட்சிக் கொடியும் பிப். 20-ந் தேதி பொதுவேலை நிறுத்தத்தின்போது ஏந்திச் செல்லப்பட மாட்டாது. அமைதியாக, கட்டுப்பாடாகத் தோழர்கள் நடந்துகொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்; தி. மு. கழகப் பொதுக் குழு, 20-ந் தேதி பொதுவேலை நிறுத்தத்திற்கு தனது முழு ஆதரவையும் தருவதாக முடிவு செய்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

என்று, தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 30-1-56 அன்று நடைபெற்ற சென்னைக் கடற்கரைப் பொதுக்கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

மேலும் அவர் சொன்னார்:—

"தேவிகுளம், பீர்மேடு பகுதிகளைத் தமிழகத்துடன் இணைக்கவேண்டும் என்பதற்காக அமைந்த கூட்டு முயற்சிபோல, இந்தியை எதிர்ப்பதற்கும் ஒரு கூட்டு முயற்சி உருவாகியிருக்கிறது.

"இந்தியை ஒரு காலத்தில் புகுத்திய அன்பர் இராசகோபாலாச்சாரியார், இன்று, இந்தியை எதிர்த்துக் குரல் கொடுத்திருக்கிறார். இந்தியை எதிர்க்கிற பெரியார் இராமசாமி, மற்றும் தி. மு. கழகம் உட்பட—'இந்தி இந்தியாவின் பொது மொழி ஆகக் கூடாது'—என்று கூறும் ஒத்த கருத்துடைய அனைவரும் கூடி, 'ஆங்கிலமே பொது மொழியாக இருக்க வேண்டும் — தொடர்ந்து' என்று முடிவு எடுத்திருக்கின்றனர்.

"இந்தியை ஒரு காலத்தில் புகுத்திய ஆச்சாரியார்—இந்தி எதிர்ப்பாளர்களைச் சிறைப்படுத்திக் கொடுமைப் படுத்திய ஆச்சாரியார் இன்று, இந்தியை எதிர்க்க முன்வந்திருப்பது, பெரியதோர் வெற்றியாகும்.

"அதற்கும் பெரியதாக வேறோர் வெற்றி அமைந்திருக்கிறது.

"இதுவரை நமது தி. மு. கழகத்தை ஒரு கட்சி என்றே ஒப்புக்கொள்ள மறுத்த பெரியார் அவர்கள், இன்று 'விடுதலை' இதழில், இந்தி எதிர்ப்புக் கூட்டணி பற்றிய செய்தி வெளியிடும்போது 'அண்ணாதுரை (தி. மு. க)' என்றும், 'நெடுஞ்செழியன் (பொதுச் செயலாளர் தி. மு. க,)' என்றும் எழுதியிருக்கிறார். நம்மை முதன் முறையாகத் தி. மு கழகத்தவர் என்று பெரியார் அழைப்பது நமக்குப் பெரிய வெற்றிதான். இதற்காக நாம் அவருக்கு நன்றி செலுத்த வேண்டும். சீனாவை ஐ. நா. சபை ஏற்றுக் கொள்வது எப்படியோ, அப்படித்தான் பெரியார் அவர்கள் நம்மை ஒரு இயக்கத்தவராக ஏற்றுக் கொண்டிருப்பது."

கூட்டணி பற்றி முதல் முழக்கம்

செஞ்சீனவில் 12 ஆண்டு திட்டம்

கருத்தறிய எல்லா கட்சிகளுக்கும் அனுப்பப்படும்

செஞ்சீனவில் 12 ஆண்டுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது.

உயர்தர சர்க்கார் பிரதிநிதிகள் கூடி விவாதித்த இத்திட்டம், விவாதிக்கப்படுவதற்காகவும், திட்டத்தின் மீது தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதற்குமாக, வருகிற ஏப்ரல் திங்கள் முதல் தேதியன்று, நாட்டிலுள்ள எல்லாக் கட்சிகளுக்கும் அனுப்பப்பட இருக்கிறது.

ஏற்கனவே கூட்டுறவு முறையில் இயங்கி நல்ல முன்னேற்றம் கண்டுள்ள பகுதிகளை வருகிற 1957-ம் ஆண்டுக்குள் கூட்டுறவு விவசாய முறையின் உச்சகட்டமாக அதாவது—பல பயிர் நிலங்களையும் ஒன்றாக்கிக் கூட்டுறவு முறையில் பயிரிடும் நிலைக்கு இந்தத் திட்டம் கொண்டுவரும் என்றும், மற்றப்படி அதிகமான அளவில் முன்னேற்றம் ஏற்பட்டிராத பகுதிகளில், 100-க்கு மேற்பட்ட விவசாயக் குடும்பத்தலைவர்களைக் கூட்டுறவில் சேர்த்து பயிர் செய்யச் செய்வதென்றும், வருகிற 1958-ல் கூட்டுறவு முறையில் பயிரிடப்படும் நிலங்களை உருவாக்கும் முக்கியத் திட்டத்தை நிறைவேற்றி முடிப்பது என்றும் திட்டத்தில் கூறப்பட்டிருக்கிறதாம்.

இது தவிர, இத்திட்டத்தையொட்டி, ஒரேமாதிரியான வேலைகளுக்கு ஒரேமாதிரியான ஊதியம் கொடுக்க வேண்டுமென்றும் இதற்கு ஏற்படுகின்ற எதிர்ப்புகளைத் தவிர்க்கத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும் கூட்டுறவு நிலையங்களுக்குக் கட்டளையிடப்பட்டிருக்கிறது என்றும் தெரிய வருகிறது.

அனைவரும் கூடி அமைத்திடும் பாடி

சர்வ கட்சி மாநாடுபற்றி விளக்கம்

டில்லி அறியட்டும் தமிழகக் கொதிப்பை

பிப்ரவரி 20—நாடு தயாராகட்டும்!

பொதுச்செயலாளர் முழக்கம்

கழகமும் பிற கட்சிகளும் கூடிய நோக்கம்

ஒப்பந்தமல்ல; ஒத்துழைப்புத்திட்டம்

நாட்டில் வளரும் நன்முயற்சி பற்றி நாவலர் மகிழ்ச்சி

சீன ஐ.நா.-வில் இடம் பெறுமுன்பே தி.மு.க. பெரியாரிடம் இடம் பெற்றது

பொதுக்குழு கண்ட முடிவு விளக்கப் பேருரை

"ஒரு மொழி பேசுகிற மக்கள் இன்னொரு மொழி பேசுகிற மக்களுடன் சேர்ந்து வாழுமாறு ஒப்படைக்கப்பட்டால் அவர்களது வாழ்வு கெடும்; உணர்ச்சி மழுங்கும்; நலன்கள் பாதிக்கப்படும் என்பதை முன்னிறுத்தித்தான் திராவிட முன்னேற்றக் கழகம் மொழிவழியாக மாநிலங்கள் அமையவேண்டும் என்று கூறுகிறது.

"தமிழ் மக்கள் சிலர், மலையாள மக்களுடன் சேர்ந்து வாழ்வதால் எத்தகைய கஷ்ட நஷ்டங்களை அனுபவிக்க வேண்டி வரும் என்பதை விளக்கவா வேண்டும்? அதேபோல, மலையாள மக்கள் சிலர் தமிழ் மக்களுடன் வாழ்வதால் ஏற்படக்கூடிய இன்னல்களும் யாவருமறிந்ததே!

"ஒரு மொழி வழங்குகிற பகுதியில் அந்த வட்டார மொழி ஆட்சிமொழியாக-சட்ட மன்றங்கள், சர்க்கார் அலுவலகங்கள், வர்த்தக நிறுவனங்கள், வழக்கு மன்றங்கள் முதலிய எல்லாவற்றிலும் இடம் பெற்று விளங்கும். அப்படி விளங்கும் ஒரு மொழிப் பகுதியில் இன்னொரு மொழி பேசும் மக்கள் எப்படி வாழ முடியும்? மற்ற மொழி பேசுகிற மக்களின் நிலை என்ன? அவர்கள் எப்படி தங்கள் உள்ளத்து உணர்வுகளை வெளிக்காட்டுவது? எப்படிப் பிறிதொரு மொழி வழங்கும் பகுதியில் தங்கள் தாய் மொழிக்கு ஆக்கம் தேடுவது? எண்ணிப் பார்க்க வேண்டாமா? நமது சகோதரத் தமிழ் மக்கள் பிற மொழிப் பகுதியில் அவதிப்படுவதை நாம் எப்படிச் சகித்துக்கொள்வது!

'மாநிலங்களைப் பிரிப்பதில் மொழியை அடிப்படையாகக் கொள்ள வேண்டுமென்பதுதான் 'நியாயமான ஏற்பாடாக முடியும். இந்த அடிப்படையை தி.மு. கழகம் மட்டுமின்றி, இதரக் கட்சியினரும் ஒப்புக்கொள்கிறார்கள்.

"காங்கிரஸ் கட்சியினர்கூட இந்த அடிப்படையை ஒத்துக்கொண்டவர்கள்தான்; ஏன்—அவர்கள்தான், மொழி வழியாக மாநிலங்கள் அமைய வேண்டும் என்று குரல் எழுப்பினர், முப்பதாண்டுகளுக்கு முன்!

"'வெள்ளைக்காரன் நிர்வாக வசதிகள் கருதிப் பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாண்டு, மாநிலங்களைக் கண்டபடி பிரித்து வைத்திருக்கிறான்; ஒரு மொழி பேசுகிற மக்களை இரண்டு மூன்று மாநிலங்களில் பிரித்துவைத்து, அந்தப் பகுதி மக்களிடை மனக்கசப்பை வளர்த்து, அதன் மூலம் தன் சுரண்டலுக்கு வழி செய்கிறான்; இந்த ஏற்பாடு ஒழியவேண்டும். ஒவ்வொரு மொழி பேசும் மக்களும் அந்த அந்த மொழி வழங்கும் மக்களுடன் கூட்டாகச் சேர்ந்து—ஒன்றுசேர்ந்து வாழவேண்டும்' என்று காங்கிரஸ்காரர்கள்தான் குரல் எழுப்பினர்கள்.

"நாட்டு மக்களில் பெரும்பாலானோர், 'இராமன் ஆண்டால் என்ன—இராவணன் ஆண்டால் என்ன?' என்று தான் கவலையற்றுக் கிடந்தனர்—இன்னமும் கிடக்கின்றனர். ஆனால், அந்த மக்கள் உள்ளத்தில் காங்கிரசார்தான், 'மொழிவழியாக மாநிலம் வேண்டும்; அதை அமைக்க மறுக்கிற வெள்ளையனை ஒழிக்கவேண்டும்' என்ற தீயை மூட்டினார்கள்; இன்று, அந்தத் தீயை—மொழி வழி மாநிலம் என்ற உணர்வை ஆளவந்தார்களாகிவிட்ட காங்கிரசார் அடக்கிவிடப் பார்க்கின்றனர்; அவர்கள் மூட்டிவிட்ட தீயை அவர்களே அணைக்க மனப்பால் குடிக்கின்றனர்.

"மொழி வழியாக மாநிலம் அமைக்கவேண்டும் என்று 30 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கூறிய காங்கிரசார், இன்று ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருப்பதால் வேறு ஏதோ காரணங்களை—வெள்ளைக்காரர்கள் காட்டிய 'நிர்வாக வசதி' என்பன போன்ற காரணங்களைக் காட்டி, 'மொழி வழி மாநிலம் கூடாது' என்று பேசுகின்றனர்.

"ஆட்சியாளர்களின் இந்தப் போக்கை தி. மு. கழகம் கண்டிக்கிறது. 'தமிழர், ஆந்திரர், கன்னடியர், கேரளத்தவர் ஆகிய நான்கு மொழி பேசும் மக்களும் மொழிவழி பிரிந்து, இனவழி ஒன்றுபட்டு திராவிட சமதர்மக் குடியரசுக் கூட்டாட்சி அமைக்கவேண்டும்' என்பதற்குத்தான் தி. மு. கழகம் பாடுபட்டு வருகிறது; எனவேதான், மொழிவழியாக தமிழ், ஆந்திர, கேரள, கன்னட மாநிலங்களை அமைக்க டில்லி சர்க்கார் மறுப்பதால், அந்தப் போக்கைக் கழகம் கண்டிக்கிறது.

"திரு-கொச்சியில் உள்ள தேவிகுளம், பீர்மேடு முதலிய தமிழ்ப் பகுதிகளும், ஆந்திராவில் சித்தூர் மாவட்டத்தில் உள்ள தமிழ்ப் பகுதிகளும் தாய்த் தமிழகத்துடன் இணையவேண்டும்—என்று, அந்தப் பகுதியில் உள்ள மக்கள் கோருகிறார்கள்; தங்கள் கருத்தினைத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்—பன்முறை, பல வழிகளில்; ஆனால், அந்தக் கோரிக்கையை ஏற்க டில்லி சர்க்கார் மறுத்து, தமிழ் மக்களுக்குப் பெரும் அநீதி இழைத்திருக்கிறார்கள்.

"இந்த அநீதியை எதிர்க்க வேண்டும்; போரிட வேண்டும்; தமிழர்தம் உரிமையைக் காக்க வேண்டும்——என்று, தி. மு. கழகம் கருதுகிறது. அதேபோல, இதரக் கட்சியினரும் கருதினார்கள்; அதனால்தான், எல்லா கட்சியினரும் கூடி தங்கள் தங்கள் கொள்கைகளை, கோட்பாடுகளை, இலட்சியங்களை மறந்துவிட்டு—கைகழுவி விட்டு அல்ல—ஆனால், எல்லோரும் எதிர்த்துப் போரிட எண்ணுகிற ஒரு அநீதியை மட்டும் மனதில் கொண்டு போராட்டத் திட்டம் வகுத்திருக்கிறார்கள்.

"சகல கட்சியினரும், 'தேவிகுளம் - பீர்மேடு பகுதிகளும், இதர தமிழ்ப் பகுதிகளும் தாய்த் தமிழகத்துடன் சேர வேண்டும்' என்று கோருகின்றனர்.

"டெல்லி சர்க்கார், அழும் பிள்ளைக்குத்தான் தருவது என்பது மட்டுமின்றி, அழாத பிள்ளையின் கையிலிருக்கும் ரொட்டியையும் பறித்து அழும் பிள்ளைக்கே தருவது என்ற போக்கில் நடந்துகொண்டிருக்கிறார்கள். இதனை எல்லாக் கட்சிகளும் எதிர்க்கின்றன; அதனால்தான் ஒன்றுகூடி தமிழர்களது நியாயமான உரிமையைக் காக்க ஒன்று சேர்ந்தனர்.

'சகல கட்சியினரும் கூடிய மாநாடு, ஒரு ஒப்பந்த மாநாடு அல்ல—ஒரு உடன்படிக்கை மாநாடு அல்ல; மாறாக, போராட்டத்தில் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்கக் கூடிய மாநாடு என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"டில்லி சர்க்கார் இழைத்த அநீதியை எதிர்த்துப் போரிட சகல கட்சிகளும் ஒன்று சேர்ந்து, தங்கள் தங்கள் ஆற்றலை ஒன்று கூட்டி, ஒரே நேரத்தில்—ஒரே முறையில்—வகையில் போராடுவர். தனித்தனியாகத் தரப்படும் 'அடி'யை அவ்வப்போது அரசாங்கம் துடைத்துக் கொள்ளும்; ஆனால், எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து, முழு ஆற்றலையும் கொண்டு ஓங்கி அறைந்தால் 'பலன்' கிடைக்க முடியும் என்று நம்புகிறோம்.

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

தமிழகமெங்கும் திராவிடர் திருநாள்

'தைப் பொங்கலன்று திராவிடர் திருநாள் கொண்டாடுவீர்' என்று தி. மு. கழகப் பொதுச்செயலாளர் தந்திருந்த அறிக்கைக்கு ஒப்ப, நாடெங்கும் கழகத் தோழர்களும், பொதுமக்களும் வெகு சிறப்பாக விழாக் கொண்டாடியிருக்கின்றனர்.

சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கல், எளியோருக்கு உணவளித்தல், விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், சிறப்புக் கூட்டங்கள் கூட்டுதல், இசை அரங்கம்-நாடகம் நடத்துதல் போன்ற நிகழ்ச்சிகளுடன் விழாக்கள் நடைபெற்ற விபரங்கள் இங்கு சுருக்கித் தரப்பட்டுள்ளன :—

சேலம் 3-வது வட்டம்

14—1—56-ல், சேலம் 3-வது வட்டம் சாமிநாதபுரம் தி. மு கழகத்தில் தோழர் பி. கே சித்தையன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எம். எம் அருணாசலம், கே. வி. குப்புசாமி, கே. பி. சந்திரையன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இறுதியில் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

உப்பள்ளி

14—1—56 மாலை $3\frac{1}{2}$ மணிக்கு, தார்வார் மாவட்டத்தைச் சேர்ந்த உப்பள்ளியில், தமிழர் கழகத்தின் சார்பில் விழா கொண்டாடப்பட்டது. ஓவியக் கண்காட்சியும் நடைபெற்றது. மாலை $4\frac{1}{2}$ மணியளவில், திரு எஸ். இராஜகோபாலன் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில், தோழர் ஆர். செகன்னாதன் பொங்கல் விழா பற்றிப் பேசி, கழக இலவச நூல் நிலையத்தைத் திறந்து வைத்தார். தோழர் கே. இராமசாமி கழகத்தின் சார்பில் வெளிவரும் 'தமிழோசை' பொங்கல் மலரை அறிமுகம் செய்தார். பின்னர் தோழர்கள் ஆர். சோதிராமன், கே. சீனுவாசன், பெ. சு. நாகேசுவரன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கொட்டாம்பட்டி

14—1—56-ல் மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி தி. மு. கழகச் சார்பில் கழகக் கட்டிடத்தின் முன்பு விழா கொண்டாடப்பட்டது. பிற்பகல் 4 மணி அளவில் சிறுர்களுக்கான பல விளையாட்டுப் போட்டிகள் நடத்தி, வெற்றி பெற்ற சிறுர்கட்கும், மற்றுமுள்ள சிறுர்கட்கும் நோட்டு, சிலேட்டு, பென்சில்கள் பரிசுகளாக வழங்கப்பட்டன. மாலை 5 மணிக்கு, கைப் பந்துப் போட்டியும் நடத்தி அவர்களுக்குக் கைத்தறித் துண்டுகள் அளிக்கப்பட்டன.

18—1—56 மாலை 5 மணிக்கு, மந்தைத் திடலில் தோழர் வீ. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்ற விழாப் பொதுக்கூட்டத்தில்தோழியர் சத்தியவாணி-முத்து சொற்பொழிவாற்றினார்.

சிந்துப்பட்டி

14—1—56ல், திருமங்கலத்தை அடுத்துள்ள சிந்துப்பட்டி வாகைக்குளம் குக்கிராமத்தில், தி. மு. கழகச் சார்பில் பொங்கல் விழா ஊர்வலமும், பொதுக்கூட்டமும் தோழர் கண்ணன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் க. ம. வ நடராசன், பெ பிச்சை ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

நல்லூர் (கந்தம்பாளையம்)

15—1—56 மாலை 3 மணிக்கு தோழர் ஏ. ஆறுமுகம் தலைமையில் ஊர்வலம் நடந்தது. தோழர் கே. இராமசாமி இயக்கக் கொடி ஏற்றிவைத்தார். தோழர் டி. எஸ். தங்கவேலு தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர்கள் வி. சிவப்பிரகாசம் அ. தமிழரசன், எம். பி. சுப்பிரமணியம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கரிசல்பட்டி

15—1—56ல், திருமங்கலத்தை அடுத்துள்ள கரிசல்பட்டியில், மாட்டுப் பொங்கலன்று தி. மு கழகச் சார்பில் பொங்கல் விழாவும், கிளைக் கழக முதலாவது ஆண்டு விழாவும் நடைபெற்றது. தோழர்கள் இரசாக், பெ. பிச்சை, வேலன், இராமு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

இராமநாதபுரம் (கோவை)

15—1—56 காலை, கிளைக் கழகச் சார்பில், விழா நடைபெற்றது. கிளைக் கழகச் செயலாளரால் கழகக் கட்டிடத்திலும், தெருவின் முக்கியப் பகுதிகளிலும் கொடியேற்றிவைக்கப்பட்டது. பின்னர், குழந்தைகளுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கப்பெற்றன. மாலை தோழர் வி. அருணாசலம் தலைமையில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று, வெற்றி பெற்றோருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. பின்னர், தோழர் எஸ். திருநாவுக்கரசு, மாரியப்பன் குழுவினரால் இசைவிருந்தும் நடைபெற்றது.

ஈ. வெ. கி. சம்பத் முழக்கம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கொண்டிருக்கின்றன. அந்தப் பெரும் அநீதியை மாநிலக் குழுவினர் மட்டுமில்லாமல், பக்கத்திலே துப்பாக்கிப் பிடித்து நின்றுகொண்டிருக்கிற நேரு பண்டிதரின் ஆட்சியும் புரிந்துவிட்டிருக்கிறது.

இத்தகைய அநீதிகளைத் துடைக்கத்தான் — எதிர்த்துப் போரிடத்தான் தமிழ் நாட்டிலுள்ள தலைவர்கள் அத்தனை பேரும் — ஒருவருக்கொருவர் மனமாச்சரியம்கொண்டவர்கள்-வெவ்வேறு கொள்கைகள் கொண்ட தலைவர்கள்—ஒருவருக்கொருவர் கொள்கையில் ஒன்றுபட்டு வர முடியாமல் பிரிந்த தலைவர்கள் எல்லாம் இன்று ஒன்று திரண்டு நிற்கிறார்கள்; தமிழர் துயர் துடைக்கப் போர்ப்பரணி பாடுகிறார்கள். அவர்களது ஏகோபித்த முடிவை தமிழர்கள் ஏற்றுக்கொள்ள இருக்கிறார்கள். பெரியார் இராமசாமி அவர்கள் இதில் கலந்துகொள்ளவில்லை என்பது நமக்கெல்லாம் கசப்பாகத்தான் இருக்கிறது; என்றாலும்கூட, பல்வேறு கட்சித் தலைவர்கள் எல்லாம் ஒன்று கூடினர் என்று கேட்கும்போது நமக்கு ஆச்சரியம் ஏற்படத்தான் செய்கிறது. ஆனால், இதுகூட அவ்வளவு ஆச்சரியமானதல்ல—அவர்கள் எல்லாரும் சேர்ந்து இந்தப் பிரச்சினையில் ஒரே மனதாக ஒரே முடிவிற்கு வந்தது உண்மையிலேயே பெரியதோர் ஆச்சரியந்தான்.

"அவரவர்களும் தங்களுக்கென தனித்தனி அரசியல் திட்டங்கள் கொண்டவர்கள்தான்; அவரவர்களுக்கென தனித்தனி கருத்துக்கள் உண்டு; ஆனால், இப்போது ஒன்றுதிரண்டு போர்ப் பட்டாளத்தில் அணிவகுத்துவிட்டனர். பிப்ரவரி திங்கள் 20-ம் நாளிலே பொது வேலை நிறுத்தம் செய்வதென முடிவு செய்திருக்கின்றனர். அந்தச் சர்வ கட்சிக் கூட்டத்திலே, கம்யூனிஸ்டுக் கட்சி, தமிழரசுக் கழகம், ம. சோ. கட்சி, சோஷலிஸ்டுக் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய பல அரசியல், பொது நிறுவனங்களின் சார்பிலும் தலைவர்கள் கலந்து கொண்டிருக்கின்றனர்.

"பிப்ரவரி 20! தமிழ் மக்கள் அனைவரின் எண்ணம் பிரதிபலிக்க இருக்கின்ற நாள்! அன்று நாடு முழுமையிலும் எங்கு பார்த்தாலும் வேலை நிறுத்தம்! மாணவர்கள் பள்ளிக்குச் செல்லமாட்டார்கள்; வீடுகள்தோறும் துக்க நாள் கொண்டாடப்படும்; தொழிற்சாலைகள் ஓய்வு பெற்றுக் கிடக்கும்; தொழிலாளர்கள் கிர்திக்கப் போகிறார்கள்—தங்களுக்கிழைக்கப்பட்ட அநீதியின் விளைவைப் பார் என்று சர்க்காருக்குத் தெரிவிக்கப் போகிறார்கள். அந்தப் போராட்டத்தைத் தமிழக மக்கள், 'மரமண்டை'கள் எனப்படுவோரும்கூட உணரத்தக்க வகையில் செய்துகாட்ட இருக்கிறார்கள்.

"நமக்கு மத்திய அரசாங்கம் இந்த அநீதி இழைத்திருக்கிறதே—நாம் என்ன தவறு செய்தோம்? திரு—கொச்சித் தமிழ்ப் பகுதிகளிலுள்ள தமிழர்களே 'நாங்கள் தாய்த் தமிழகத்துடன் சேர விரும்புகிறோம்' என்று எடுத்துரைத்திருக்கிறார்களே — அதைவிட நாம் என்ன தவறு செய்துவிட்டிருக்கிறோம்?

"இன்றைக்கு மராட்டியத்தின் நிலையைப் பார்ப்போம். அங்குள்ள மந்திரிகளெல்லாம், 'இதோ எங்கள் இராஜினாமா—பெற்றுக் கொள்ளுங்கள்,' என்று கூறி பதவியிலிருந்து விலகுகின்றனர். இந்தியத் துணைக் கண்டத்தின் நிதி அமைச்சராக இருக்கும் தேஷ்முக்கூடத் தமது அமைச்சர் பதவியைத் துறந்துவிடுவதாக அறிவித்தார்—மராட்டியருக்குத் துரோகம் இழைத்ததற்கு எதிராக! அங்கே, நாட்டுப் பற்றை மராட்டியரிடை காண்கிறோம். நாட்டுக்கு இன்னல் என்றதும், உயிரையும் திரணமாக மதிக்கும் மராட்டியத் தியாகச் சுடர்களைக் காண்கிறோம்.

"ஆனால் நம் தமிழ் நாட்டைப் பார்த்தால், அந்தோ பரிதாபம்! நாட்டைப் பற்றிக் கவலையில்லாது உல்லாச புரிகளில் வாழ்வோரைத்தான் காண்கிறோம். அவர்களது சொற்களையும் நாம் கேட்டுத்தான் வருகிறோம்.

"தேவிகுளம், பீர்மேடு தமிழர்களுக்குச் சேரவேண்டும் என்பதற்காக சர்க்கார் முழு முயற்சியும் செய்யும்—என்று எந்த பக்தவத்சலனார் கூறினாரோ, அதே பக்தவத்சலனார் தான், 'நேருவே சொன்ன பிறகு நாம் அப்பகுதிகளை மீண்டும் கேட்பது தவறு' என்கிறார்.

"தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் தமிழர்களுக்குத்தான் சேரவேண்டுமென்ற இவ்வளவு பெரிய ஒரு நியாயம 'அவரே' என்கிற இழுப்பில் போய் எப்படி மாட்டிக்கொண்டது என்பதை தமிழர்கள் அறிய விரும்புகின்றனர்.

பக்தவத்சலனா மட்டுமல்ல; நிதி அமைச்சராக இருக்கிற சுப்பிரமணியம் சொல்லிவிட்டார்—'நேருவின் முடிவு இறுதியானது; இதற்கு மேல் ஒன்றும்கிடையாது'—என்று!

"அமைச்சர் சுப்பிரமணியம் நன்றாகப் படித்தவர்தான்; ஆனாலும், அவரைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் — 4, 5-வது பள்ளி வகுப்பு சரித்திரப் புத்தகங்களை எடுத்துப் பாருங்கள்'—என்று!

"சரித்திரத்தில், எந்த ஒரு அரசியல் தீர்மானம் இறுதியானதாக இருந்திருக்கிறது? ஆண்டவன் முடிவுகளுக்கே இப்போது 'அப்பீல்' போடும் நிலை ஏற்பட்டபோது, அரசியலில் மட்டும் ஒரு தீர்மானம் இறுதியானதாக ஆகிவிட்டது என்று சொல்ல முடியாது. அமைச்சர் சுப்பிரமணியம், 'தாசர் புத்தி' தலைக்கேறித் தத்துப் பித்தென்று உளறுகிறார்; ஆனால், இவர் எவருக்குத் தாசானுதாசராக இருக்கிறாரோ, அவர் - நேரு பண்டிதரே கூறிவிட்டார் — 'என்னுடைய முடிவு இறுதியானது அல்ல' — என்று! ஆனால், அவருக்குக் கொடி பிடிக்கும் சுப்பிரமணியம் மட்டும் இங்கே குலைக்கிறார்!

"நேரு பண்டிதரின் முடிவு இறுதியானதாகுமோ இல்லையோ—நமக்குத் தெரியாது; ஆனால் அமைச்சர் சுப்பிரமணியம் அவர்களது அரசியல் வாழ்வு இத்துடன் இறுதியானதாக ஆகிவிட்டது மட்டும் தெளிவாகத் தெரியப் போகிறது.

"ஆயிரமாயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கிற ஒரு தனி மனிதனைக் காட்டி, 'அவரே கூறுகிறார்' என்று இழுப்பதிலே எத்தனை நாளைக்கு இந்த நாட்டு மக்களின் தலை விதி நிர்ணயிக்கப்படுவது?

"அமைச்சர் சுப்பிரமணியம் சொல்கிறார்—'பதவியிலே இல்லாதவர்கள் எங்களை இராஜினாமா செய்யச் சொல்கிறார்கள்'—என்று! பின் யார்தான் சொல்வார்கள்? பதவியில் இல்லாதிருக்கும் மக்கள் தான் சொல்வார்கள்! பக்தவத்சலம் சுப்பிரமணியத்தைப் பார்த்துச் சொல்லுவாரா? சுப்பிரமணியம் பக்தவத்சலத்தைச் சொல்வாரா? 'உங்களுக்கு இன்னும் கூடவா உணர்ச்சி வரவில்லை—உங்கள் பதவியை விட்டு வருவதற்கு?' என்று மக்கள்தான் சொல்லுவார்கள்!

"தேவிகுளம், பீர்மேடு கிடைப்பதாக இருந்தால் நான் இராஜினாமாச் செய்துவிடத் தயார் என்கிறார் சுப்பிரமணியம்!

"இவர் என்ன வின்ஸ்டன் சர்ச்சிலா? மார்ஷல் ஸ்டாலினா—இவரது பதவி விலகுதலுக்கு அவ்வளவு பெரிய அரசியல் விளைவு ஏற்பட்டுவிட? இவர் இராஜினாமாச் செய்வதால் தேவிகுளம்—பீர்மேடு கிடைக்கும் என்பதல்ல; சுப்பிரமணியம் என்ற குடிமகனார் கோவைச் சீமையில் பிறந்தார்—அவருக்கும் கொஞ்சம் சுயமரியாதை உணர்வு உண்டு—என்பதைக் காட்டிக் கொள்வதற்குத்தான் இராஜினாமாச் செய்யச் சொல்கிறார்கள், மக்கள்!

"சட்டசபையில், முன்பு பக்தவத்சலமும், சுப்பிரமணியமும், 'தேவிகுளம்—பீர்மேடும் தமிழர்களுக்கே' என்று கூறினார்கள்; இப்போது, 'அவரே சொல்லும்போது எப்படி மீண்டும் கேட்பது?'—என்கிறார்கள்! சங்கிலிபோட்டுப் பிணைக்கிறார்கள்! இழுக்கிறார்கள்! ரவை போட்டு உருட்டுகிறார்கள்!

"யார் இந்த 'அவரே'? தேவிகுளம்—பீர்மேடு 100க்கு 100 தமிழர்களுக்குத்தான் என்று கூறினவர்கள்தான் இப்போது 'அவரே' என்று இழுக்கிறார்கள். இப்படி எத்தனை எத்தனை 'அவரே'க்களால் நாசமாக்கியிருக்கிறார்கள் இந்த நாட்டை!

"புதுச்சேரி, காரைக்கால் பகுதிகள் 100-க்கு 100 தமிழர்களுக்குத்தான் சேர வேண்டும்; ஏன் சேர்க்கப்படவில்லை? அங்குள்ள தமிழர்களை எல்லாம், கேவல் சிங்கையும் — அவரது மனைவியார் திருமதி கேவல் சிங்கையும் 'தரிசிக்க' வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் ஏன் வைத்திருக்கிறார்கள்?"

தேவிகுளம்—பீர்மேடு:

சென்னையில் பொதுக் கூட்டங்கள்

★

பிப். 3 :	தியாகராய நகர்	பொதுச்செயலாளர் —இரா. நெடுஞ்செழியன்
4 :	மாதவரம்	—ஏ.வி.பி.ஆசைத்தம்பி
5 :	ஐகோர்ட் கடற்கரை	—அண்ணா
7 :	அயனாவரம்	—கண்ணதாசன்
8 :	சேப்பாக்கம்	—அண்ணா
10 :	10-வது வட்டம்	—அண்ணா
11 :	மீர்சாகிப்பேட்டை	—டி.கே.சீனிவாசன்
12 :	கோகலேஹால்	—சி. பி. சிற்றரசு
13 :	திருவொற்றியூர்	—இரா. நெடுஞ்செழியன்

கரூர் நகராட்சி

அறிக்கை

கரூர் நகராட்சிக்குச் சொந்தமான சந்தைகள், வண்டிப்பேட்டைகள், பஸ் நிலையம், ஆடு வதைச்சாலை ஆகியவற்றில் 1956—57 ஆண்டிற்குச் சுங்கம் வசூலிக்கும் உரிமையும், கராக் கடைகள், பெட்டிக் கடைகள், பஸ் நிலையக் கடைகள் ஆகியவற்றின் குத்தகைகளும், இன்னும் இதர இனங்களின் குத்தகைகளும் 22—2—56-ந் தேதி புதன் கிழமை காலை 10 மணி முதல் நகராட்சி அலுவலகத்தில் நகராட்சிஆணையரால் பகிரங்க ஏலம் போடப்படும் என்றும்,

நகராட்சிக்குத் தேவையான எழுது பொருட் கருவிகள் (Stationary articles), அச்சு-பைண்டிங் வேலைகள், பெட்ரோல், மோட்டார் எண்ணெய்கள், மாட்டுத் தீவனங்கள், கஸ்தூரிபாய் தாய்-சேய் நல விடுதிக்குத் தேவையான பால், கோதுமை ரொட்டி, வெண்ணெய், பழம், சர்க்கரை வகையறுக்கள், சிதம்பரம் மாணவர் உணவு விடுதிக்குத் தேவையான அரிசி, மளிகைச் சாமான்கள், இன்னும் இதர இனங்களுக்கும் 24—2—56-ந் தேதி மாலை 4 மணிவரை முத்திரையிடப்பட்ட உறைகளில் ஒப்பந்தப் புள்ளிகள் (Tenders in sealed covers) நகராட்சி ஆணையரால் பெற்றுக்கொள்ளப்பட்டு, அன்றே மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

மேற்கொண்டு விபரங்கள் தேவையானால், அலுவலக நேரத்தில் நேரிலோ அல்லது தபால் மூலமோ தெரிந்து கொள்ளலாம்.

நகராட்சி அலுவலகம், கரூர்
28—1—56

எஸ். ஆர். கோபால ராவ்,
ஆணையர்

திருமணங்கள்

3—2—56 வெள்ளி அன்று காலை 8 மணிக்கு சென்னை வண்ணை (3-வது வட்டம்) தி. மு. கழக மாவட்டப் பிரதிநிதி தோழர் எம். இராமையா—தோழியர் அம்பிகாம்பாள் இல்வாழ்க்கை ஒப்பந்தம், வண்ணை, மணியக்காரச் சத்திரச் சாலை, எண். 43 இல்லத்தில், தோழர் வி. பி. மாணிக்கவாசகனார் தலைமையில் நடைபெறும். தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், நடிப்புப் புலவர் கே. ஆர். இராமசாமி, காஞ்சி-கல்யாணசுந்தரம் மற்றும் பலர் வாழ்த்துரை வழங்குவர். இதனையே அழைப்பாகக் கொண்டு அனைவரும் வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

* * *

3—2—56 காலை 9 மணிக்கு, மதுரை அருகிலுள்ள விராட்டிபத்து மணமகள் இல்லத்தில் தோழர் சி. ஐம்பு—தோழியர் சாந்தா திருமணம் தோழர் க. அன்பழகன் தலைமையில் நடைபெறும். தோழர் ஈ. வெ. கி. சம்பத் வாழ்த்துரை வழங்குவார்.

* * *

3—2—56 காலை 8 மணிக்கு, தூத்துக்குடி, பாளையங்கோட்டை ரோடு திரு. மா. செல்லையா அவர்கள் இல்லத்தில், தோழர் ஜே. என் சுந்தரராமன் தலைமையில் தோழர் மா. சுந்தரம்—தோழியர் சானகி திருமணம் நடைபெறும் தோழர் இரா. சு. தங்கப்பழம் வாழ்த்துரை வழங்குவார்.

அன்று காலை 9 மணிக்கு, மேலச் சண்முகபுரம் எண். 1 மணமகன் இல்லத்தில், தோழர் எஸ் நடராசன் தலைமையில் தோழர் மா. மாரியப்பன்—தோழியர் வெள்ளையம்மாள் திருமணம் நடைபெறும்.

தி. மு. கழக 2-வது

மாநில மாநாடு அலுவலகம்

திருச்சியில் 'மே திங்களில் நடைபெறும் தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டிற்கென 1—2—56 முதல் தனியாக அலுவலகம் திறக்கப்பட்டிருக்கிறது.

மாநாடு சம்பந்தமாகக் கடிதம் எழுதும் தோழர்கள் இனி கீழ்க்கண்ட முகவரிக்குக் கடிதம்எழுத வேண்டுமென அறிவிக்கப்படுகிறது.

அலுவலக நேரம்:
காலை 9—1; மாலை 3—7

செயலாளர்
தி. மு. கழக 2-வது மாநில மாநாடு
நெ. 9, கிலேநார் தெரு,
தெப்பக்குளம்—திருச்சி.

திராவிடர் திருநாள்

திருவத்திபுரம்
பெரியார் திடலில்

2—2—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: வி. குட்டியப்பன்
பேசுவோர்:
என். வி. நடராசன்
வி. எஸ். கோவிந்தராசன்

3—2—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: போ. கா. இராமசாமி
பேசுவோர்:
காஞ்சி-கல்யாணசுந்தரன்
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.

சென்னை—9-வது வட்ட தி. மு. க. உறுப்பினர்கட்கு

1—2—56 இரவு 9 மணிக்கு கிளைக் கழகப் பணிமனையில் (எண் 4, பரமானந்த முதலி தெரு) கிளைக் கழக அவசரப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். தேவிகுளம், பீர்மேடு போராட்டத் திட்டங்கள் குறித்தும், பிப். 20-ந் தேதி நடைபெற இருக்கிற பொது வேலை நிறுத்த ஆக்கவேலைகள் குறித்தும், பொதுக்கூட்டம் கூட்டுவது குறித்தும் ஆலோசிக்கப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ